# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
## (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | S.C.No. 187/2019 |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | அ.சா– 08 ( PW– 08 ) |
| **பெயர்** | :– | **சக்திவேல்** |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | **அய்யாதுரை** |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**சான்றாளரின் கையொப்பம்**

எதிரிகள் தோன்றினார்கள். எதிரிகளின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல்விசாரணை**

நான் சேலம் மாவட்டம் மேட்டூர் R.S. பகுதியில் வசிக்கிறேன். நான் தனியார் தொழிற்சாலையில் மேற்பார்வையாளராக வேலை செய்தேன். சுமார் 07 ஆண்டுகளுக்குமுன் எனது நண்பர் முரளிதரன் என்னை கைப்பேசி -யில் அழைத்து காவேரி cross தாபாவில் தன்னை வெட்டிவிட்டார்கள் என்றும் நான் அதற்கு அருகில் உள்ள பழைய இரும்பு கிடங்கில் ஒளிந்து கொண்டு இருக்கிறேன் என்றும் என்னை காப்பாற்று என்று சொன்னார். நான் என் இருச் சக்கர வாகனத்தில் அந்த இடத்திற்கு சென்றேன். நான் செல்வதற்குமுன் காவல் துறையினர் அங்கு வந்திருந்தனர். நான் அந்த இடத்திற்கு சென்றபோது முரளிதரன் என்னை பார்த்துவிட்டு வெளியே வந்து என் வண்டியில் ஏறி அமர்ந்துக் கொண்டார். நான் அவரை மாதையன் குட்டை பகுதியில் உள்ள SMP மருத்துவமனைக்கு அவரை அழைத்துச் சென்றேன்.

அவரை அழைத்துச் சென்றபோது அவர் தாபாவில் அமர்ந்து சாப்பிட்டு கொண்டிருந்தபோது எதிரில் இருந்தவரை முகமூடி அணிந்து வந்தவர்கள் வெட்டிவிட்டார்கள் என்றும் அவரும் எழுந்து வெளியில் ஓடிய போது அவரை வெட்டினர் என்றும் சொன்னார். மேற்சொன்ன மருத்துவ -மனையில் முதல் உதவி சிகிச்சை பெற்றபின் மேட்டூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தேன். அங்கிருந்து சேலம் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல சொன்னார்கள். முரளிதரனின் உறவினர்கள் வந்ததால் நான் சென்றுவிட்டேன். இதுச் சம்மந்தமாக காவல் துறையினர் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க பிறழ் சான்றாளராக பாவிக்கப்பட்டார். விடைபொதி வினாக்கள் கேட்க அனுமதி வழங்கப்பட்டது.**

முரளிதரனை நான் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றபோது வழக்கு சம்பவத்தை நிகழ்த்தியது எதிரிகள்தான் என்றும் எதற்காக அவ்வாறு எதிரிகள் செய்தார் என்பவது சம்மந்தமாகவும் முரளிதரன் என்னிடம் விளக்கமாக சொன்னார் என்று புலனாய்வின்போது கூறிவிட்டு தற்போது அதை மறைத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை**

இல்லை.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.